பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 20 திங்கட்கிழமை 07.11.2022 கதிர் 254

## நூறு நாள் செயல்முனைவின் இறுதி நாள் மக்கள் பிரகடனம்

### நாளை வடக்கு, கிழக்கில்

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய நூறு நாட்கள் செயல்முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம் நாளை (08) காலை 10.30 ☞3

## கொலையாளிகளுக்கு என்ன தண்டனை?



### அரசிடம் ஸ்ரீநேசன் கேள்வி

காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்பதை அரசு சார்ந்தவர்களின் வெவ்வேறான கருத்துக்கள் நம்பவைக்கின்றது. எனவே, படுகொலையாளிகளுக்கு என்ன தண்டனையை இந்த அரசு வழங்கப்போகின்றது?

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற ☞10

## கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற கைதிகளில் 35 பேர் சரணடைவு

### நீதி அமைச்சரிடம் அறிக்கை கோரும் ஜனாதிபதி




பொலனறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை – கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், தப்பிச் சென்ற கைதிகளில் 35 பேர் சரணடைந்துள்ளனர்.

நேற்று இரண்டு குழுக்களுக்குஇடையில்இடம்பெற்ற மோதலை அடுத்து அங்கிருந்தவர்களில் 50 பேர் வரையில் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தநிலையில், 35 பேர் மீண்டும் புனர்வாழ்வு நிலையத்தில்சரணடைந்துள்ளனர் என்று பொலிஸ் ☞2

# இலங்கைக்கு ரணில்; தமிழருக்கு சம்பந்தன்



### சிறந்த தலைவர்கள் என்கின்றார் நீதி அமைச்சர்

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் – பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணக்கூடிய சிறந்த தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருப்பது போல் தமிழ் மக்களுக்கும் சிறந்த ஒரு தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் விளங்குகின்றார். ☞2

### மாவீரர் நாள் நினைவேந்தல்:

## மன்னாரில் பொலிஸார் எச்சரிக்கை

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவினரால் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அங்கு சென்ற அடம்பன் ☞2

## தனுஷ்கவுக்கு நீதிமன்றமும் பிணை மறுப்பு

### போட்டிகளில் இருந்தும் இடைநிறுத்தம்



இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் தனுஷ்க குணதிலக்கவின் பிணைக் ☞10

## தூர சேவை பஸ்கள் இனிமேல் சோதனை

### வவுனியா விபத்தையடுத்து ஆளுநர் அதிரடி நடவடிக்கை

ஒவ்வொரு நாளும் தூர சேவையில் ஈடுபடும் பஸ்களின் வழித்தட அனுமதிப்பத்திரத்தை ஏ – 9 வீதியில் பரிசோதிக்க நடவடிக்கை ☞2

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு ‘ஜனநாயகப் பொன்’ விருது



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு ‘ஜனநாயகப் பொன் விருது’ வழங்கப்பட்டுள்ளது.

‘இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ்’ நிறுவனத்தால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ☞2



## 300 கிலோ கிராம் ஹெரோயினுடன் 10 பேர் சிக்கினர்



அம்பாந்தோட்டை கடற்பகுதியில் 300 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 10 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு படகுகள் ஊடாகப் பயணித்த போது, அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினர், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் ஹெரோய்ன் பாவனையாளர்கள் 183 பேர் ஒக்டோபரில் மட்டும் அடையாளம்



யாழ்ப்பாணத்தில் கடந்த ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையான 183 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தவிடயம்யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ☞2

## அன்று தீர்வைத் தர முன்வராத நிமால் இன்று எமக்குப் புத்திமதி சொல்வதா?

### சிறீதரன் தக்க பதிலடி



தமிழர்கள் ஆயுத பலத்தோடு நின்று பேசிய போது தீர்வைத் தர முன்வரா நிமால் சிறிபால டி சில்வா இன்று எங்களுக்கு ஆலோசனை கூற வருகின்றார் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அரசு ஒரு தேர்தலுக்கு ☞10

## தமிழ்த் தேசியக் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விருது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகதன்னைஅர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகரை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகின்றது.

'இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ்' நிறுவனத்தின் வருடாந்த டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பாடநெறியை முடித்த 75 பேர் டிப்ளோ பட்டத்தைப் பெற்றனர்.

இந்த வருடாந்த டிப்ளோமா வழங்கும் விழாவில் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகிய பாடங்களுக்காகத் தன்னை அர்ப்பணித்த புகழ்பெற்ற அரசியல் பிரமுகர்களின் மதிப்பீடு நடத்தப்படுகின்றது.

அதற்கமைய, அதில் இரா.சம்பந்தன், வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் ஜனநாயகப் பொன் விருதைப் பெற்றார். நான்கு தசாப்த கால நாடாளுமன்ற வாழ்க்கையில் ஜனநாயகத்துக்காகச் சம்பந்தன் காட்டிய அர்ப்பணிப்பை மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரியவும் கலந்துகொண்டார்.

## யாழில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

கடந்த ஒக்டோபர் மாதம் மாத்திரம் 183பேர்உயிர்கொல்லிஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் என்று மருத்துவப் பரிசோதனைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 155 பேர்சிறைச்சாலையிலிருந்து மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளனர். 28 பேர் நீதிமன்றத்தின் ஊடாக அனுப்பப்பட்டு மருத்துவப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனைவிட தாமாக முன்வந்து சமூகமயப்படுத்தல் சிகிச்சையில் இணைந்து கொள்ளும் உயிர்கொல்லி ஹெரோய்னுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கந்தக்காடு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. நேற்று இடம்பெற்ற குறித்த மோதல் சம்பவத்தில் 5 பேர் காயமடைந்துள்ள நிலையில் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம், தப்பிச் சென்றுள்ள ஏனையவர்களைக் கண்டறிவதற்காக விசேட விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பொலனறுவை, வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் விரைந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

## மன்னாரில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார், மாவீரர் நாளை நினைவுகூர்ந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழீழதாயகக்கனவுடன்சாவினைத் தழுவிய வீரமறவர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் இந்த மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரையில் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதற்காகத் தாயக தேசத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்துள்ள இடங்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவு செய்யும் பணி நேற்று இடம்பெற்றது. மாவீரர்களின் கல்லறைக்கு அகவணக்கம் செலுத்தி அஞ்சலி மேற்கொண்டு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. அது முடிவடையும் நேரத்தில் அங்கு அடம்பன் பொலிஸார் வந்தனர்.

சிரமதானப் பணி தொடர்பில் விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டனர். தொடர்ந்து மாவீரர் நாளன்று - நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளை நினைவுகூர்ந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துச் சென்றனர்.

## தூர சேவை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற அதிசொகுசு பஸ் விபத்தில் மூவர் உயிரிழந்திருந்தனர். இதையடுத்து இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விபத்து தொடர்பான அறிக்கையைப் பொலிஸாரிடம் கோரியுள்ளேன். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வடக்கு மாகாணத் தலைவருடனும் கலந்துரையாடியுள்ளேன். இதன் அடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் -கொழும்பு உட்பட ஏனைய தூர இடங்களுக்கு சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்தையும் வடக்கு மாகாணத்துக்குள் ஓர் இடத்தில் ஒவ்வொரு நாளும் வழித்தட அனுமதியை பரிசோதித்தல், ஏ - 9 பாதையில் ஏதோ ஓர் இடத்தில் பஸ்களை 10 நிமிடங்கள் நிறுத்திச் சாரதிகளைச் சோர்வு தன்மையில் இருந்து நீக்குதல், ஒவ்வொரு மாதக் கடைசியிலும் தூர சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களின் தரப் பரிசோதனையை மேற்கொள்ளல் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், வவுனியா - யாழ்ப்பாணம் இடையிலான நேரக் கட்டுப்பாட்டையும் பஸ்களுக்கு விதிக்கவுள்ளோம் - என்றார்.

## இலங்கைக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுக்குப் பொருத்தமான சிறந்த ஆளுமை உடைய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். அதனால்தான் அவரின் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. அவரின் ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் நாடு மீண்டெழும் என்ற அதீத நம்பிக்கை எம்மிடம் உண்டு. இதேவேளை, சம்பந்தனின் காலத்தில் தீர்வைத் தாம் வென்றெடுக்க வேண்டும் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் எண்ணமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எம்முடன் ஒன்றிணைந்து தொடர்ந்து செயற்பட்டால் அவர்களின் எண்ணம் விரைவில் நிறைவேறும். அவர்கள் எதிர்க் கட்சியினர் போல் விலகி நின்று செயற்பட்டால் தீர்வு விடயத்தில் நாம் எப்படி அவர்களுடன் ஒன்றிணைந்து பயணிக்க முடியும்? எதுவாகினும் தேசிய பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதனது பதவிக் காலத்தில் தீர்வுகளை வழங்குவார் - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கப்ராலின் உபதேசம்

**நாடு வாங்குரோத்து நிலையை அடைந்து விட்டது, அதனால் வெளிநாடுகளில் பெற்ற கடனை மீளச் செலுத்த இயலவில்லை என்று கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி இலங்கை அறிவித்தது.**

**அப்போது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவர் சர்ச்சைக்குரிய அஜித் நிவார்ட் கப்ரால். நாடு பொருளாதார ரீதியில் சூறையாடப்பட்டமைக்கு காரணமானவர்களில் இவரும் பிரதானமானவர் என்று கூறப்படுகின்றது.**

**மோசமான பொருளாதார நெருக்கடியை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கின்றது, அதிலிருந்து மீளுவதற்கு ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதி அடைவதுதான் என்று இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அப்போது எதிர்க்கட்சியில் இருந்த அனைவரும் வலியுறுத்தியபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அந்த நடவடிக்கைக்குக் கடைசிவரை தடை போட்டுக் கொண்டிருந்தவர் இந்த மத்திய வங்கி ஆளுநர் கப்ரால்.**

**இந்தப் பொருளாதார நெருக்கடி உச்சத்தினால் பதவியையும், நாட்டையும் விட்டுத் தப்பி ஓட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது ஆட்சி காலத்தில் தாம் இழைத்த இரண்டு பெரும் அரசியல் தவறுகளில் ஒன்று சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை – தலையீட்டை – நேரத்துடன் கோரத் தவறியமை என்று பின்னர் பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தார்.**

**அப்படி நாணய நிதியத்திடம் இலங்கை சரணாகதி அடைவது – இப்போது அடைந்திருப்பது – மிக மோசமான, தவறான முடிவு என்று இப்போதும் விமர்சிக்கும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.**

**2021 செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் தாம் பதவியில் இருந்த 203 நாள்களில் – அதாவது சுமார் 7 மாத காலத்தில் – 44 ஆயிரத்து 600 கோடி ரூபா பெறுமதியான புதிய நோட்டுகளே அச்சிடப்பட்டன, பணவீக்கம் 18 வீதமாகவே காணப்பட்டது என்கிறார்.**

**ஆனால் தற்போது மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க பதவியேற்று அதே காலப்பகுதியில் – 207 நாள்களுக்குள் – 69 ஆயிரத்து 100 கோடி ரூபாவுக்கு புதிய நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன, பண வீக்கம் 66 வீதத்தை அடைந்துள்ளது எனச் சுட்டிக்காட்டி இருக்கின்றார் கப்ரால்.**

**ஆகவே, உண்மையை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என உபதேசம் மிக்க கோரிக்கை ஒன்றையும் அவர் முன் வைத்திருக்கிறார்.**

**அவரது நிர்வாகத்தின் கீழும், அதற்கு முன்னரும் இருந்த ஆட்சியாளர்கள், நிர்வாகிகள், அதிகாரிகள் இலங்கையின் பொருளாதாரத்தில் நடத்திய சூறையாடலின் – தவறான நிர்வாகத்தின் – விளைவுகள் போகப்போகத்தான் கழுத்தை இறுக்கும் என்பது பொருளாதாரத்தில் அரிச்சுவடிப் பாடம் படித்தவருக்கும் புரிந்து கொள்ளக்கூடிய அம்சமாகும்.**

**கோட்டாபய நிர்வாகத்தின் கீழ் எகிறத் தொடங்கிய பணவீக்கம் உச்சத்தைத் தொட்டு, இப்போதுதான் சற்றுச் சரியத் தொடங்கி இருக்கின்றது. நாணய நோட்டு அச்சிடல் உட்பட ஏனைய பொருளாதார நிலைமைகள் கூட மீளுவதாயின் அப்படி உயர்வை எட்டித்தான் குறைய தொடங்கும். அது மக்களுக்குப் புரியாது என்பது போல திரும்பவும் மக்கள் தலையில் மிளகாய் அரைக்கத் தயாராகிறார் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர். அவ்வளவுதான்.**

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்தால் சட்ட நடவடிக்கை!

## பவ்ரல் அமைப்பு அறிவிப்பு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் பல்வேறு காரணங்களை முன்வைக்க தயாராகுமானால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவிக்கையில் –

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கனகபுரம் துயிலும் இல்ல சிரமதானப் பணிகள் நேற்று!



கிளிநொச்சி – கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் சிரமதானப் பணிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பணிக் குழுவினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன..

நேற்று காலை மாவீரர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி அகவணக்கம் செலுத்தி சிரமதானப் பணிகள் ஆரம்பமாகின.

இதற்கமைய சிரமதான பணிகளில் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தின் முதன்மை செயற்பாட்டாளர் தியாகு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், அரசியல் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நூறு நாள் செயல்முனையின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது என்று வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

'புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான 'சமஷ்டி அரசியல் தீர்வு' வேண்டிய மக்கள் பிரகடனம்' என்ற தலைப்பில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் இன்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

'வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்' எனும் 100 நாட்கள் செயல்முனைவுடைய மக்கள் குரலானது வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங்களிலும் சுழற்சி முறையில் இவ்வருடம் ஆவணி முதலாம் திகதி முதல் நடைபெற்று வருவதை தாங்கள் அனைவரும் அறிவீர்கள்.

குறிப்பாக,1948 இற்குப் பின் இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வந்த இனவாத அடிப்படையிலான அரசியல், பொருளாதார, சமூக, இன ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13 ஆவது தித்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், திட்டமிட்ட வகையில் சிங்கள பேரினவாத சக்திகளால் 2006இல் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலமான 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது.

இந்தக் கால இடைவெளியில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதி முகாம் வாழ்வை அனுபவித்தனர். போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டதின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்று வரையில் தமிழ் சமூகம் எதிர்கொண்டு வருகின்றது.

எனவே, வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டுவரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, சுய கௌரவமுள்ள உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றோம்.

அந்த அடிப்படையிலேயே வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் 100 செயல்முனைவானது 'வடக்கு, கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்'எனும் மக்கள் குரலின் ஊடாக முன்வைக்கப்படும் மக்கள் பிரகடனமாகவே 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு – கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வு' என்பது அமைந்துள்ளது.

எனவே வடக்கு, கிழக்குத் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இம் மக்கள் பிரகடனத்துக்கான நாளைய (08) ஒன்றுகூடலில் அனைவரும் பங்கேற்று தழிழ் பேசும் மக்களின் கோரிக்கையை ஒரே குரலில் ஓங்கி ஒலிக்குமாறு கோருகின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மக்கள் பிரகடனக் கூடல்கள் இடம்பெறும்.

01. யாழ்ப்பாணம் – சங்கிலியன் பூங்கா, நல்லூர்.

02. அம்பாறை – காரைதீவு பிரதேச பூங்கா, காரைதீவு.

03. கிளிநொச்சி – இளைஞர் மட்டம் விளையாட்டு மைதானம், பரந்தன் சந்தி

04. மட்டக்களப்பு – புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டு மைதானம், தன்னாமுனை

05. வவுனியா – நகர சபை மைதானம், வவுனியா

06. திருகோணமலை –முத்தவெளி வெளியரங்கு, திருகோணமலை

07. முல்லைத்தீவு – கரைத்துறைப்பற்று பிரதேச சபை விளையாட்டு மைதானம்

08. மன்னார் – பொது விளையாட்டரங்கு, மன்னார்.

– இவ்வாறு வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தான்சானியாவில் சீரற்ற வானிலையால் ஏரியில் வீழ்ந்த விமானம்; 19 பேர் சாவு!



டார் எஸ் சலாம், நவ.07

கிழக்கு ஆபிரிக்க நாடான தான்சானியாவில் உள்ள டார் எஸ் சலாம் நகரில் இருந்து புகோபா நகரை நோக்கி சென்ற பயணிகள் விமானம் ஒன்று மோசமான வானிலை காரணமாக, அங்குள்ள விக்டோரியா ஏரியில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் 19 பேர் பலியாகியுள்ளனர். மேலும், 20க்கும் அதிகமானோர் மீட்கப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான விமானத்தில் 39 பயணிகள், இரண்டு விமானிகள் மற்றும் இரண்டு கபின் பணியாளர்கள் உட்பட மொத்தம் 43 பேர் இருந்துள்ளனர். விமானம் சுமார் 100 மீற்றர் (328 அடி) நடுவானில் இருந்தபோது, மோசமான வானிலை காரணமாக சிக்கலை எதிர்கொண்டு ஏரியில் விழுந்து விபத்து ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கானாவில் பொருளாதார நெருக்கடி உச்சம் வீதிக்கு இறங்கி மக்கள் தொடர் போராட்டம்







அக்ரா, நவ.07

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாக கானாவில், பொருளாதாரம் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ள காரணத்தினால் அந்நாட்டு அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த செப்ரெம்பர் மாதம் அங்கு நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலை திடீரென உயர்வடைந்த நிலையில், பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். இதனால் அந்நாட்டு மக்கள் வீதிகளில் இறங்கி தொடர் போராட்டங்களை நடத்த ஆரம்பித்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் அந்நாட்டு அதிபர் நானா அகுபோ-அட்டோ பதவி விலக வேண்டும் எனக் கோஷங்களை எழுப்பினர். மேலும் பொருளாதாரத்தை சீரமைக்க சர்வதேச நாணய நிதியத்துடன் கானா அரசு நடத்தும் பேச்சுவார்த்தை கேலிக்கூத்தானது என அவர்கள் தெரிவித்து இந்தப் போராட்டங்களைத் தொடர்கின்றனர்.

## பேய்த் திருவிழாவில் பலியானோருக்காக ஆயிரக்கணக்கானோர் தீபமேற்றி அஞ்சலி




தென்கொரிய தலைநகர் சியோல் நகரில் இடாயிவொன் பகுதியில் அண்மையில் கொண்டாடப்பட்ட பேய்த்திருவிழாவில் (ஹாலோவீன்) கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றையதினம் இடம்பெற்றதுடன் இந் நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

கடந்த ஒக்டோபர் 31ஆம் திகதி ஹாலோவீன் எனும் திருவிழா வெகுவிமர்சையாகக் கொண்டாடப்பட்டது. சியோலின் இடோவான் என்ற இடத்தில் பிரபல சந்தைப் பகுதியில் நடைபெற்ற விழாவில், சுமார் ஒரு லட்சம் பேர் கூடியிருந்தனர். விழா நடைபெற்ற இடத்தில் அதிகளவான கூட்ட நெரிசல் ஏற்பட்டிருந்தது. ஒரு கட்டத்தில் கூட்ட நெரிசல் எல்லை மீறியதால், பலருக்கு மூச்சுத்திணறல் மற்றும் மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்தனர். இந்தச் சம்பவத்தால் 156 பேர் பலியாகியுள்ளனர். 150க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இதில் உயிரிழந்தவர்களுக்கு அந்நாட்டு மக்கள் நேற்று மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி ஊர்வலம் நடத்தியுள்ளனர். இதில் பங்கேற்றவர்கள் ‘விபத்திற்கு அதிபர் பொறுப்பேற்க வேண்டும்’ என்ற வாசகங்களுடன் கூடிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். விபத்திற்கு பொறுப்பேற்று அதிபர் யுன் சுக் இயோல் பதவி விலக வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். நகரின் உட்கட்டமைப்பு போதுமான அளவு மேம்படுத்தப்படாததே இந்த விபத்துக்குக் காரணம் என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## அதிபரை பதவி விலகக் கோரி பெருவில் மக்கள் போராட்டம்

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான பெருவில், அந்நாட்டு அரசுக்கு எதிராக பொதுமக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையாலும், அவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளாலும் அங்கு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பெரு நாட்டின் அதிபரும், இடது சாரி தலைவருமான பெட்ரோ காஸ்டிலோ, கடந்த ஆண்டு அதிபராகப் பதவியேற்றமையில் இருந்து அவர் மீது ஆறு கிரிமினல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகளை அதிபர் பெட்ரோ காஸ்டிலோ திட்டவட்டமாக மறுத்து வருகிறார்.

இதற்கிடையே பெரு நாட்டில் கொரோனா பரவல் உள்ளிட்ட காரணங்களால் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் அத்தியாவசிய பொருள்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதிபர் காஸ்டிலோவை பதவி விலகக் கோரி அந்நாட்டு மக்கள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் பெரு தலைநகர் லிமாவில் பொதுமக்கள் நடத்திய போராட்டத்தில் திடீரெனப் பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது. இதையடுத்துப் பொலிஸார் தடியடி நடத்தியமையுடன், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமையாக் அங்கு பரபரப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திரும்பிப் பார்க்க வைத்த சித்தர் திருமூலர்

## அவரின் குருபூசைத் தினம் இன்று

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்,ஆஸ்திரேலியா)

உலகிலே பல மொழிகள் காணப்படுகின்றன. அவற்றுள் எங்கள் தமிழ்மொழியும் ஒன்றாகும். ஏனைய மொழிகளுக்கு இல்லாத சிறப்பினை எங்கள் தமிழ் மொழி தன்னகத்தே கொண்டிருக்கிறது. அதாவது பக்தியை இலக்கியமாக்கிய தனித்துவம் எனலாம். ஏனைய மொழிகள் பக்தியைத் தனியாகவே பார்த் தன. ஆனால் எங்கள் தமிழ் மொழி அதனை வாழ்வுடன் இணைத்து இலக்கியமாகக் கண்டது.இதன் காரணமாகப் பக்தியின் வழியில் சென்ற அடியார்களின் மனத்தினின்று உதித்த சிந்தனைகள் அத்தனையும் திருப்பாட ல்களாய் தமிழை வளம்படுத்தி வழிகாட்டியாய் அமைகின்ற நிலை ஏற்பட்டுவிட்டது எனலாம். அந்த வகையில் பன்னிரு திருமுறைகள் வந்து அமைகின்றன.

பன்னிரு திருமுறைகளைத் தந்தவர்கள் பல இடங்களைச் சேர்ந்தவர்கள். பல அனுபவங்களைப் பெற்றவர்கள். அவர்களின் அனுபங்கள் ஆண்டவனின் பாற்பட்டதாகவும் அதேவேளை உலகியல் நிலைப்பட்டதாகவும் அமைந்தே இருந்தது. ஒன்பதாம் திருமுறைவரை அமைந்த திருப்பாடல்கள் ஒரே வகையினவாய் இருப்பதைக் காணமுடிகிறது. பத்தாம் திருமுறையாக அமைகின்ற திருமுறை யானது ஒன்பது திருமுறைகளையும் விட வித்தியாசமானதாக அமைவதனைக் காணக் கூடியதாக இருக்கிறது. தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு என்று திருமுறைகள் வருகின்ற நிலையில் பத்தாவதாய் வருகின்ற திருமுறை திருமந்திரம் என்னும் சிறப்புப் பெயரினைத் தாங்கி வருகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் முக்கியமாகும். சிறப்புப் பெயரினைத் தாங்கி வருகின்ற திருமந்திரத்தைப் பற்றி அறிவது அனைவருக்கும் அவசியம் அல்லவா!

இந்தத் திருமந்திரம் தமிழுக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷமாகும். இதனைத் தத்துவ நூல் என்பதா, சமய நூல் என்பதா, மருத்துவ நூல், என்பதா அறிவியல் நூல் என்பதா அல்லது புதுமைக் கருத்துக்களை உரத்துச் சொல்லும் புரட்சி நூல் என்பதா? இப்படிப் பல நிலையில் பன்முகங் கொண்டதாக இத்திருநூல் அமைந்திருக்கிறது என்றுதான் எண்ணிட வைக்கிறது. அந்த அளவுக்கு தமிழ்ப் பக்தி உலகில் திருமந்திரம் தனித்துவமான ஒரு நூலாக மிளிர்ந்து நிற்கிறது என்பதை மறுத்துரைத்துவிடல் இயலாது.

இப்படிப் பல புதுமைகளைக் கொண்ட திருமந்திரத்தைத் தந்தவரின் வரலாறும் கூட புதுமையாகவே காணப்படுகிறது. இவரின் தொடக்கமே எம்பெருமான் உறைகின்ற கயிலாயமாகிறது. அங்கிருந்து ஏதோ ஒரு நோக்கத்துக்காக அவரின் வருகை பிறப்பாய் அமைகிறது. வந்தவருக்கு அவர் வந்த உடலே வாய்க்காது விட வேறொரு உடலிற் புகுந்து அந்த உடலுக்கு உரியயவனின் பெயருடன் இம்மண்ணில் நிற்கும் ஒரு புதுமை நிகழ்கிறது. அப்பொழுதுதான் அவருக்குத் தான் தாங்கிய உடலுக்கு உரித்தான வனின் பெயரான மூலன் என்னும் பெயர் வாய்க்கிறது. திருவருட்சக்தி அவரிடம் நிறைந்த காரணத்தால் மூலன் – திருமூலன் ஆகும் நிலை ஏற்பட்டதாக அறியமுடிகின்றது. அதுவும் நிரந்தரமாகவில்லை என்பதையும் அவர்பற்றிய கதை எடுத்து இயம்புகிறது.

திருமந்திரம் எமக்களித்த அந்தத் திருவருளாளரைப் பற்றிய செய்தி பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமானால் எடுத்துச் சொல்லப்படுகிறது. திருத்தொண்டர் தொகையினைப் பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரை நம்பிரான் என்று உயர் நிலைப்படுத்தியே அறிமுகம் செய்கிறார் என்பது நோக்கத்தகது. சம்பந்தப் பெருமானை எம்பிரான் என்றவர் திருமூலரை நம்பிரான் என்று சுட்டுவது மனமிருத்த வேண்டிய கருத்தாகும்.

திருமூலர் வரலாறு எப்படி இருந்தாலும் அதைப் பற்றி விவாதிப்பது அவசியம் அற்றதாகும். அவரால் அளிக்கப்பட்ட பொக்கிமான திருமந்திரம் என்பதே கவனித்தில் கொள்ளப்படுதல் வேண்டும். திருமந்திரம் எப்படிப் பாடப்பட்டது யாரால் பணிக்கப்பட்டது என்பதுதான் மிகவும் முக்கியமான செய்தியாகும்.




**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே**

இறைவன் தன்னைப் படைத்ததற்கான சரியான விடையைத் திருமூலரே தருகிறார். தமிழ் கொண்டு தன்னைப் பாடவே இறைவன் படைத்தான் பணித்தான் என்பதுதான் அந்த மறுமொழியாகும். இதுதான் அவரின் பிறப்பின் நோக்கமாகும். இங்கே தமிழ் என்று அழுத்திச் சொல்லப்படுவது கருத்திருத்த வேண்டியதேயாகும். திருமூலர் இறைவன் விருப்பப்படி தமிழில் நன்றாகவே பாடினார். அறம் பாடினார். பொருள் பாடினார். இன்பம் பாடினார். தத்துவம் பாடினார். யோகம் பாடினார். ஆரோக்கியம் பாடினார். ஒழுக்கம் பாடினார். நிலையாமை பாடினார். விஞ்ஞானம் மொழிந்தார். அதேவேளை அரிய மெஞ்ஞானமும் மொழிந்தார். எதைப் பாடினாலும் இறைவனை அகமிருத்தியே அத்தனையும் தந்துநின்றார் என்பதுதான் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். சைவசித்தாந்தம், யோக சாத்திரமுறை, விஞ்ஞானமுறை என்று திருமந்திரம் இருந்தாலும் அடிநாதமாய் அமைந்திருந்திருந்தது – பரம்பொருளை உணர் ந்து கொள்ளுதலே என்பதை மறந்துவிடக் கூடாது.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களையும் மூவாயிரம் பாடல்களையும் கொண்டது. ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடி மூவாயிரம் ஆண்டுகள் இருந்திருக்கிறார் என்பது வரலாறு. இதில் நாம் நுழைந்து விவாதம் செய்ய வேண்டியதில்லை. திருமூலரைச் சித்தர் என்றே அழைப்பது வழக்கம். சித்தர்கள் வாழ்வானது விசித்திரமானது. அறியமுடியா பல அதிசயங்கள் கொண்டது என்பதுதான் பொதுவான ஒரு கருத்து நிலையாகும். அவரின் பிறப்போ அல்லது அவரின் மறைவோ பற்றிய சர்ச்சைகளை விட்டு விட்டு அவரின் சிந்தனைக் கருவூலமான திருமந்திரத்தையும் அதன் மூலம் யாவரையும் திரும்பிப் பார்த்திட வைத்திட்ட திறத்தையுமே நாமனைவரும் எம்மகத்தில் அமர்திட வேண்டும். அதுதான் மிகவும் பொருத்த மானதுமாகும்.

மூவாயிரம் பாடல்களும் தமிழுக்குக் கிடைத்த வைரங்கள். அவற்றில் அறிவார்ந்த பல கருத்துகள் பொதிந் திருக்கின்றன என்பதை அனைவருமே ஒத்துக் கொள்ளுவார்கள். அறிவார்ந்த கருத்துக்களை வெளிப்படுத்த திருமூலர் கையாண்ட மொழி நடையினை வியந்துமே பார்க்க வேண்டி இருக்கிறது. இலகுவான சொல் லாக இருக்கும். படிக்கும் பொழுது ஒரு கருத்தை எமக்குள் ஏற்படுத்தும். ஆனால் உள்நுழைந்து பார்க்கும் பொழுதுதான் திருமூலர் தெரிவார். அவர் எம்மைத் திரும்பிப் பார்க்க வைத்திடக் கையாண்ட சித்தும் தெரிய வரும். அந்த அளவுக்கு ஆழம் நிறைந்திருக்கும். அதேவேளை கவிதை அழகும் செறிந்திருக்கும். அதற்குள் பக்தியும் , தத்துவமும் , புதைந்தும் இருக்கும். இப்படியான சிறப்பினை வேறெதிலுமே காணமுடியாது. ஆனபடியால்த்தான் அது திருமந்திரம் என்னும் பெயரினைத் தாங்கிடும் பெருமைக்கு ஆளானது எனலாம்.


ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை அனைவருமே தேடுகின்றோம். அந்த அருட்சோதியை வேண்டிப் பல இடங்களைத் தேடியும் ஓடுகின்றோம். மனம் அங்கலாய்த்தபடியே இருக்கிறது. அருட்பெருஞ்சோதியை அறிய முடியாமல் இருப்பார்க்கு திருமூலர் புதுமையாய் ஒரு கருத்தைச் சொல்லி புதுப் பாதையையும் காட்டுகின்றார். இது யாருமே சிந்திக்கா சிந்தனையாகும்.

(06ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திரும்பிப் பார்க்க ........



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே**

சித்தம் போக்கு சிவன் போக்கு என்று சொல்லுவதை நாமெல்லாம் கேட்டிருக்கின்றோம். இதன் அர்த்தம் சிவபெருமானின் போக்கானது அன்பு நிலையேயாகும். இதனைக் கருத்திருத்தியே திருமூலரும் சிவனை அன்பாய் காணுகின்றார். ஆகவேதான் சிவன் வேறல்ல – அன்பு வேறல்ல . இரண்டுமே ஒன்று தான் என்று உரக்கக் கூறுகிறார். ஆண்டவனை அன்பாய்க் காணுவதே மிகவும் உகந்த நிலை என்பதுதான் திருமூலர் எண்ணமாகும்.பரம்பொருளை அன்புடன் இணைத்து அப்பரம் பொருளுக்கு அன்புதான் பெயர். அந்த அந்த அன்புதான் சிவன் என்று காட்டும் பாங்கில் யாவரையும் திரும்பிப் பார்த்திட வைக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். விளங்காதவருக்கும் விளங்கப் பண்ணிடும் உத்தியாய் இருக்கிறதல்லவா ?

உடம்பினைப்பற்றி அதனுள் இருக்கும் உள்ளத்தினைப் பற்றியெல்லாம் பலரும் பலவாறு பார்த்திருக்கிறார்கள். ஆனால் திருமூலர் பார்வையோ யாவரையும் விட வித்தியாசமானதாய் அமைந்திருக்கிறது. உடம்பு இழுக்கா என்றால் இல்லையே என்கிறார். அதற்குத் தக்க காரணமும் தருகிறார். அங்குகூட பரம்பொருளையே உட்புகுத்தியும் நிற்கிறார்.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.**

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே**

**உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்**
**மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெடப்**
**பள்ளமும் மேடும் பறந்து திரிவாரே**
**கள்ள மனமுடைக் கல்வி இலோரே**

**தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ**
**வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்**
**தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார்போல்**
**ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.**

உடம்பினைப் பற்றிய பார்வையும், அதனூடாக வெளிப்பட்ட புதுமையான சிந்தனையும், திருமூலர் உலகினுக்கு உணர்த்திய பெருந் தத்துவமாய் இருக்கிறது அல்லவா! இந்தப் பாடல்களை அறிவால் அணுகுவதைவிட உணர்வால் உள்ளிருத்துவதே உகந்ததாகும்.

**யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை**
**யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை**
**யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே**

இந்தப் பாடலை நாமனைவரும் தெரிந்தே வைத்திருக்கிறோம். பாடலைப் பாட மாக்குவதோ அல்லது பாடலின் பொருளைக் கூறுவதோ இங்கு முக்கியம் அல்ல. இப்பாடல் ஊடாக திருமூலர் சமூகத்துக்கு எதனை உணர்த்திட விரும்புகிறார் என்பதே மிக மிக முக்கியமானதாகும். பரம்பொருளைப்பூசிப்பதற்குஒரு பச்சிலையே போதும் என்கிறார். பரம்பொருளைப் பூசித்தால் மட்டும் போதுமா என்று கேட்டு விட்டு – பசுவுக்குப் புல்லுக்கொடு. உண்ணும் போது யாராவது வந்தால் ஒரு கைப்பிடி உணவு கொடு. இப்படி யெல்லாம் உனக்குச் செய்வது கஷ்டமாக இருந்தால் நல்லதாக ஒரு வார்த்தையினை யாவது மற்றவரைப் பார்த்துச் சொல்லிவிடு. என்று குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவதுபோல எமக்கெல்லாம் எடுத்துரைக்கின்றார். பரம்பொருளை நாடுவதும், பூசிப்பதும் எவ்வளவு முக்கியமோ அதே முக்கியத்துவத்தை பசுவுக்கு வாயுறை கொடுப்பதற்கும், உண்ணும்போது ஒரு கைப்பிடி கொடுப்பதற்கும், இன்னுரை மற்றவர்க்கு வழங்குவதற்கும் திருமூலர் கொடுத்து நிற்கிறார் என்பதுதான் அகம் அமர்த்திட வேண்டிய கருத்தாகும். மகேசன் சேவையுடன் சமூகச் சிந்தனையும் மிகவும் அவசியமானதுதான் என்ப தையே திருமூலர் எண்ணிச் சொல்லுகிறார் என்பதே கருத்திருத்த வேண்டிய கரு எனலாம்.இந்தப் பாட லின் மூலம் நல்ல அறமும் உணர்த்தப்படுகிறதுஎன்பதும்கவனத்தில்கொள்ளப்படல் வேண்டும்.அறங் களை இலகுவாக்கி அதனையாவது இருக்கும் காலத்தில் செய்யுங்கள் என்று நல்ல குருவாய் நல்லதொரு உபதேசத்தை வழங்கியவர் – மனித வாழ்வினையும், அதன் நிலையாமையினையும் படம் பிடித்துக் காட்டுகிறார். திருமூலரைத் தவிர எவராலுமே இப்படி விளக்கிடவும் முடியாது. உணர்த்திடவும் முடியாது என்பதுதான் உண்மை.

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்க மேஇறை நொந்ததிங் கென்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே**

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம்என்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே**

வந்தார். நன்றாகவே அதுவும் சுவையாகவே உண்டார். அழகான மனைவியுடன் இன்பமாய் இருந்தார். இட துபக்கம் சிறிது வலிக்கிறது என்றார்.நோவினால் படுத்தார். படுத்தவர் படுத்தே விட்டார். எழவே இல்லை! ஒரு நாடகம் போல காட்டி மனித மரணத்தினை திருமூலர் சமூகத்துக்கு உணர்த்தி நிற்கிறார். இங்கே நிலையாமையும் இருக்கிறது. மருத்துவமும் இருக்கிறது. இடப்பக்கம் நொந்தால் இருதய நோய். அதனால் உயிராபத்து வரும். இதனை எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் திருமூலர் என்னும் சித்தர் பெருமான் சொல்லி இருப்பது எம்மையெல்லாம் அவர் பக்கம் திருப்பிப் பார்த்திட வைத்திடும் நிலைதானே !

படுத்தவர் எழவேயில்லை. படுத்தவர் பெரிய அந்தஸ்த்தில் உள்ளவர். வசதிகள் வாய்ப்புகள் நிறைந்தவர். ஆள் பலம் படைத்தவர்.அரசியலில் உயர்நிலையில் இருப்பவர். அனைவரையும் ஆட்டிவைத்தே வாழ்ந்தவர். அவரிப்போ எழமுடியாமல் வீழ்ந்துவிட்டார். ஊரிருப்பவர்கள் எல்லோரும் வந்தார்கள். ஒலிக்கி அழுதார்கள். சற்று நேரங்கழித்து – அந்தஸ்த்திலிருந்தவரின் பெயரினைச் சொல்லாது எப்பதான் இந்தப் பிணத்தை எடுக்கப் போகிறார்களோ என்று சொல்லி நிற்கின்றார்கள். – நிலைமை உடனேயே மாறி விட்டது என்கிறார் திருமூலர். அதுமட்டுமா ? ஆடவைத்து நின்றவரின் ஆட்டம் அடங்கிய பின் பிணம் என்னும் பெயருடன் சூரையங் காட்டுக்குக் கொண்டு சென்று தீயிட்டு எரித்து , அங்குள்ள நீர் நிலையில் மூழ்கி எழுந்து – அந்தஸ்த்தில் இருந்தவரையே நினைப்பிலிருந்து அகற்றியே விட்டார்கள். இதுவும் ஒரு படமாக காட்டப்படுகிறது அல்லவா ! இதுதான் வாழ்கை! இதுதான் வாழ்கையின் நிதர்சனமான நிலை!

உலகிலே இருக்கின்ற அனைவருக்கும் இப்படி ஒரு தத்துவத்தை மிகவும் பக்கு வமாய் அதேவேளை உறைக்கும்படியும் உரைத்தவர் திருமூலர் ஒருவரே என்பதுதான் இங்கு மனத்திருத்த வேண்டிய உண்மையாகும்.

திருமுறைகளை ஆலயங்களில் பாடும் பொழுது திருமந்திரம் அங்கு இடம்பெறுவதைக் காணவே முடிவதில்லை. திருமந்திரம் என்பது ஒரு சாத்திர நூல். அது தோத்திர நூல் அல்ல. அது நிலையாமையினை உணர்த்தும் நூல். தத்துவங்களை உள்ளடக்கிய நூல். சாதாரண மானவர்களுக் கெல்லாம் விளங்காத நூல். சித்தரின் நூல்.முத்தியினை முன்னிறுத்தும் நூல். விளங்குவது கடினம். என்றெல்லாம் பல கருத்துகள் இருப்பதனால் திருமூலரையோ அல்லது திருமந்திரத்தையோ நாடுவதும் தேடுவதும் குறை வாகவே இருக்கிறது.கோவில்களில் கூட புராணங்கள் பற்றியே விரிவுரைகள் பெரும்பாலும் இடம் பேறும். திருமந்திரம் என்றாலே அது ஒரு மந்தி நூல் என்று எண்ணுவதே வழக்கமாகிவிட்டது. ஆம் ... அது மந்திர நூல்தான். நிறைமொழியான பலகருத்துக்கள் அதில் இருப்பதால் அது மந்திர நூல் அதாவது உயர்வான, சிறப்பான, மதிப்பான மந்திர நூல் ஆகையால்த்தான் திரு என்னும் அடைமொழி இணைக்கப்பட்டு திருமந்திரம் ஆகி திரும்பிப் பார்த்திட வைத்திருக்கிறது.

# தண்ணீரில் மிதந்து வந்த கள்ள நோட்டுகள் கேரளப் பொலிஸார் விசாரணைகள் தீவிரம்






திருவனந்தபுரம்,நவ.07

கேரளாவில் தொழிலாளர்கள் தோட்டம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தபோது அங்கு 500ரூபா கள்ள நோட்டுக்கள் காணப்பட்டமையைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதன் அடிப்படையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. கேரளாவின் மலப்புரம் மாவட்டம் மஞ்சேரி மேலக்கம் பகுதியில் ஒரு காய்கறி தோட்டம் உள்ளது. அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் வழக்கம் போல நேற்று வேலைக்குச் சென்றனர். அப்போது தோட்டத்தில் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச வைக்கப்பட்டுள்ள தொட்டி அருகே ஏராளமான 500 ரூபா நோட்டுகள் தண்ணீரில் மிதந்தபடி இருந்தன. இதை கண்ட தொழிலாளிகள் தோட்ட உரிமையாளருக்கும், பொலிஸாருக்கும் தகவல் கொடுத்தனர். அவர்கள் விரைந்து வந்து பார்த்த போது, தண்ணீரில் மிதந்த சில நோட்டுக்கள் தீயில் எரிந்து கருகி இருப்பது தெரியவந்தது. பொலிஸார் அந்த நோட்டுக்களைக் கைப்பற்றி சோதனை செய்தனர். அவை கள்ளநோட்டுக்கள் எனத் தெரியவந்துள்ளது.

இதையடுத்துப் பொலிஸார் அந்தக் கள்ள நோட்டுக்கள் அனைத்தையும் கைப்பற்றி அவற்றை பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக மஞ்சேரி பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, கள்ளநோட்டுக்களை தோட்டத்தில் வீசி சென்றவர் யார்? எதற்காக வீசி சென்றனர்? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

## நிலவின் இருண்ட பக்கத்தை ஆய்வு செய்ய விண்கலம் அனுப்பத் தயாராகிறது இஸ்ரோ



டேராடூன், நவ.7

இந்திய விண்வெளி ஆய்வு மையம் (இஸ்ரோ) அடுத்தடுத்து வரும் ஆண்டுகளில் நிலவுக்கும், செவ்வாய் கிரகத்திற்கும் விண்கலங்களை அனுப்புவது தொடர்பான திட்டப்பணிகளை மும்முரமாக மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக சந்திரயான்-3 மற்றும் ஆதித்யா எல்-1 ஆகிய விண்கலங்களை அடுத்த ஆண்டு விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில், உத்தரகாண்டின் டேராடூனில் ஆகாஷ் தத்வா மாநாடு நடந்தது. இதில் அலகாபாத் சார்பு இயற்பியல் ஆய்வக இயக்குனர் அனில் பரத்வாஜ் கலந்துகொண்டார். அப்போது அவர் உரையாற்றுகையில்–

ஜப்பான் விண்வெளி ஆய்வு மையத்துடன் இணைந்து, நிலவின் இருண்ட மறுபக்கத்திற்கு இஸ்ரோவின் விண்கலத்தை அனுப்பும் திட்டம் குறித்து பேச்சு நடை பெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின்படி, ஜப்பானில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட் மூலம் இஸ்ரோவால் தயாரிக்கப்பட்ட ரோவர் மற்றும் லேண்டர் கருவிகளை நிலவின் தென் துருவத்திற்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளோம். சூரிய வெளிச்சமே இல்லாத நிரந்தர இருளைக் கொண்ட நிலவின் மறுபக்கத்தைக் குறித்து ஆய்வு செய்ய இந்த திட்டம் உதவும். இந்தத் திட்டம் நிறைவேறினால் நிலவு ஆராய்ச்சியில் பல்வேறு சுவாரஸ்யமான தகவல்கள் கண்டறியப்படலாம். – எனத் தெரிவித்தார்

## தனது முழுக் குடும்பத்தவர்களையும் கொன்று புதைத்த15வயது சிறுவன்

### திரிபுராவில் நடந்த கொடூரம்



அகர்தலா, நவ.7

திரிபுராவின் தலாய் மாவட்டம், கமல்பூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட துரை ஷிப் பாரி கிராமத்தில் ஒரு வீட்டிற்கு வெளியே இருந்த குழியில் உடல் ஒன்று கிடந்து உள்ளது. இது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததும் அவர்கள் சம்பவ பகுதிக்கு சென்று உடலை கைப்பற்றினர். மேலும், வீட்டிற்கு வெளியே இருந்த குழியை சந்தேகத்தின்பேரில் தோண்டியபோது 3 உடல்கள் கிடைத்துள்ளன. மொத்தமுள்ள 4 உடல்களில் 3 பேர் பெண்கள், ஒருவர் ஆண். அவர்கள் அனைவரும் ஒரே குடும்ப உறுப்பினர்கள் என்று தெரியவந்துள்ளது.

இது பற்றி கமல்பூர் காவல் அதிகாரி ரமேஷ் யாதவ் கூறும்போது, இந்தச் சம்பவம் பற்றி விசாரணை நடத்தியதில் அதே குடும்பத்தில் உள்ள 15 வயது சிறுவன் படுகொலைகளை செய்த விவரம் தெரிய வந்துள்ளது. சிறுவனை கைது செய்து விசாரித்து வருகிறோம் என்றார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் பாதல் தேப்நாத் (வயது 70), சுமிதா தேப்நாத் (வயது 32), சுபர்னா தேப்நாத் (வயது 10) மற்றும் ரேகா தேப் (வயது42) என அடையாளம் காணப்பட்டு உள்ளனர். படுகொலைக்கான காரணம் பற்றி உடனடியாக தெரியவில்லை என்றும் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சென்னையில் விதிகளை மீறியோருக்கு தண்டம் 15 நாள்களில் ரூபா 1.88கோடி



சென்னை, நவ.7

சென்னையில் திருத்தம் செய்யப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின்படி தற்போது விதிமுறைகளை மீறும் வாகனங்களுக்கு உயர்த்தப்பட்ட அபராத தொகை விதிக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் பொலிஸார் அதிரடிச் சோதனை மேற்கொண்டு வீதிகளில் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் வாகனங்களுக்கு அபராதம் விதித்து வருகிறார்கள்.

அதன்படி சென்னையில் கடந்த 15 நாள்களில் போக்குவரத்து விதிமுறைகளை மீறியதாக 30 ஆயிரத்து 699 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.1 கோடியே 88 லட்சத்து 82 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இதில் 12 ஆயிரத்து 625 வழக்குகளில் அபராத தொகை ரூ.70 லட்சத்து 46 ஆயிரம் வசூல் செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஹெல்மெட் அணியாததற்காக 8,240 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ.42 லட்சத்து 78 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## கொழும்பில் இருந்து சென்னைக்கு தங்கம் கடத்திய வாலிபர் சிக்கினார்

சென்னை,நவ.7

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் பெரும் அளவில் தங்கம் கடத்தி வரப்படுவதாக விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சுங்க இலாகா அதிகாரிகள் விமானப் பயணிகளைத் தீவிரமாகக் கண்காணித்தனர்.

அப்போது கொழும்பில் இருந்து சென்னை வந்த விமானத்தில் பயணம் செய்த இலங்கையை சேர்ந்த வாலிபரை சந்தேகத்தின்பேரில் நிறுத்தி விசாரித்தனர்.

அதிகாரிகளிடம் அவர், முன்னுக்குபின் முரணாக பேசியதால் அவரது உடைமைகளை சோதனை செய்தனர்.

ஆனால் அதில் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தும் அவரது டிராலி சூட்கேசில் சிப் பகுதியில் தையல் போடப்பட்டதுபோல் இருந்தது. இதனால் சந்தேகம் அடைந்த சுங்க இலாகா அதிகாரிகள், அந்த தையலை பிரித்துப் பார்த்தனர்.

அதில் தங்கத்தை கம்பிபோல் மாற்றி சூட்கேசுக்குள் மறைந்து நூதன முறையில் கடத்தி வந்தமை தெரிய வந்தது. ரூபா 46 லட்சத்து 24 ஆயிரம் மதிப்புள்ள 1 கிலோ 38 கிராம் தங்கத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட இலங்கை வாலிபரை கைது செய்து விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உகந்தமலை ஆலயத்தில் அமைக்கப்பட்டு வந்த முருகன் சிலை நிர்மாணப்பணி இடைநிறுத்தம்!

## உலக இந்துக்கள் கவலை; தவிசாளர் ஜெயசிறில் நேரில் விஜயம்!







(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அமைக்கப்பட்டு வந்த 18 அடி உயரமான முருகன் சிலை நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வன ஜீவராசிகள் திணைக்களம் இந்தத்தடை உத்தரவைப் பிறப்பித்து இருப்பதாக ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த 18 அடி உயரமான முருகன் சிலை உகந்தமலை சந்நதியில் உள்ள, வள்ளியம்மன் மலையில் அமைந்த வள்ளியம்மன் ஆலயத்தின் பின்புறம் மலையில் அமைக்கப்பட்டு வந்தது.

அத்திவாரம் அமைக்கப்பட்டு பீடம் எழுப்பப்பட்ட நிலையில் இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முருகன் சிலை நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட சம்பவமானது, உலகெங்கிலுமுள்ள இந்துக்களின் மனங்களை புண்படச்செய்துள்ளன. இதனால் அவர்கள் வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

சம்பவத்தை கேள்வியுற்ற பிரபல சமூக செயற்பாட்டாளரும், காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் நேற்று முன்தினம் ஸ்தலத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க வைச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திசாநாயக்க கூறுகையில் –

கடந்த ஏப்ரல் மாதமளவில் வள்ளி அம்மன் மலையில் வள்ளியம்மன் ஆலயத்திற்கு பின்னால் 18 அடி உயரமான முருகன் சிலை அமைப்பதற்கு அடிக்கல் நட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகின.

இருந்த போதிலும் ஜுலை மாதமளவில் பணியை நிறுத்துமாறு வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்தது.

ஆரம்பத்தில் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் அனுமதி பெறப்பட்டது.

தற்போது கொழும்பு தலைமையகத்தில் இருந்து இத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் வீரசிங்க எம்.பி., மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சந்திரகாந்தன் எம்.பி. போன்ற அரசியல் வாதிகள் இங்கு வந்தபோது முறையிடப்பட்டிருக்கின்றது .

இது தவிர நான் அரசாங்க அதிபர் தொடக்கம் வனஜீவராசிகள் திணைக்கள பணிப்பாளர் வரை சென்று முறையிட்டுள்ளேன். இதற்கான அனுமதி விரைவில் கிடைக்கப்பெறும் என்று நம்புகின்றேன்.

தவிசாளர் ஜெயசிறில் அங்கு கருத்துரைக்கையில் –

இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்ட இந்த ஆலயம் மலைகளாலும் மரங்களாலும் சூழப்பட்ட ஒரு பழமையான ஆலயம். ஆலய வளாகத்தில் உள்ள வள்ளியம்மன் மலையில் முருகன் சிலை அமைக்கப்பட்டு வந்தது. என்ன காரணத்துக்காக இது நிறுத்தப்பட்டதோ தெரியாது.

ஆனால், இந்த செயல் முழு இந்துக்களின் மனங்களையும் புண்பட செய்திருக்கின்றது. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவாக அனுமதியை வழங்கி இந்த செயற்பாட்டை முன் எடுத்துச் செல்ல உதவ வேண்டும்.

அண்மையிலே இந்தியாவில் ராஜஸ்தானிலே 368 அடி உயரமான உலகின் மிகப்பெரிய சிவன் சிலையை அமைத்து அழகு பார்த்தார்கள். எமது நாட்டிலும் உன்னஸ்கிரிய தொடக்கம் நாட்டின் பல பாகங்களிலும் மிக உயர்ந்த புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இங்கு ஆலய வளாகத்துக்குள், அதுவும் ஆலயமருகே எழுப்பப்பட்ட இந்தச் சிலை நிர்மாணம் நிறுத்தப்படுவதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. பல அரசியல்வாதிகள் சந்தித்தனர் என வண்ணக்கர் கூறினார். அவர்களது முயற்சியும் எனது முயற்சியும் சேர்ந்து நல்லதொரு தீர்வை பெற நடவடிக்கையை மேற்கொள்வோம். – என்றார்.

# மட்டக்களப்பின் அமிர்தகழியில் பிரமாண்டமாக சண்டி ஹோமம்





(வி.ரி. சகாதேவராஜா)

உலகிற்கு முதல் சைவசித்தாந்த நூலை தந்தவரும், நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அளித்த மூத்த சித்தருமான திருமூலர் பெருமானின் குருபூஜையை முன்னிட்டு நடைபெறும் சண்டி ஹோமம், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் தலைமையில் மட்டக்களப்பு அமிர்தகழியில் நேற்று (6 ஆம் திகதி) ஆரம்பமாகிய சண்டி ஹோமம், நாளை செவ்வாய்க்கிழமை நிறைவடையவுள்ளது.

இலங்கையின் பிரபல வேத வாத்தியார் சிவஸ்ரீ வத்சாங்க குருக்களின் தலைமையிலான வேத விற்பன்னர்கள் எண்மர் சண்டி ஹோமத்தை நடத்தி வருகின்றார்கள். அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்தவர்கள்.

ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன.

இன்று திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு அனைத்து கர்ம வினைகளையும் களைந்து சிவபதமளிக்கும் ஏகாதச ருத்ர ஹோமம் இடம் பெற்று தொடர்ந்து காலை 8மணிக்கு பூர்ணாகுதி இடம் பெற்றது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவ சங்கர் ஜி சங்கல்பத்தில் இருந்து யாகத்தில் பங்கேற்றார்.

யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் நமசிவாய மகேஸ்வரன் சுவாமி தியாகராஜா உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.

மாலையில் நமக்குள் இருக்கும் அபூர்வ ஆற்றலான குண்டலினி சக்தியை விழிக்க செய்து அனைத்து வித சித்திகளையும், ஆற்றல்களையும் கொடுக்கும் ஸ்ரீ சக்ர பூஜை, ஆதார சக்ர பூஜை, தேவி மகாத்மிய பாராயணம் இடம் பெறவிருந்தது.

நாளை செவ்வாய்க்கிழமை அபூர்வமான ஐப்பசி பௌர்ணமி திதியில், அதிகாலை 3 மணிக்கு மாபெரும் சண்டி ஹோமம் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம் பெற்று காலை 9 மணிக்கு பூர்ணாகுதி இடம் பெறுதலுடன் ஹோமம் நிறைவுக்கு வருகிறது.

# பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லையாம்!

## அமைச்சர் டக்ளஸ் இப்படிக் கூறுகின்றார்



பலாலியில் விமானத்தை இறக்க இந்தியா விரும்பவில்லை என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போது பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டு, மூன்று வருடங்கள் கடந்தும் அது இயங்கு நிலையில் இல்லாதமை தொடர்பாகக் கேட்கப்பட்ட போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

பலாலி விமான நிலையம் இயங்குவதற்கு தயாரான நிலையிலையே உள்ளது. ஆனாலும் அங்கு விமானங்கள் வரத் தயாராக இல்லாத நிலைமையே காணப்படுகிறது.

இந்திய விமானங்கள் அங்கு தரையிறங்கத் தயார் இல்லை. அதனாலேயே விமான நிலையம் இயங்காத நிலையில் காணப்படுகிறது. – என்றார்,

அதன் போது, பலாலி விமான நிலையத்தில் இருந்த தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்டவை தெற்கில் உள்ள விமான நிலையங்களுக்கு எடுத்து செல்லப்பட்டு உள்ளன எனத் தகவல்கள் வெளி வந்துள்ளன என கேட்ட போது –

அது முற்றிலும் தவறான தகவல். எனக்கு பொய் சொல்ல வேண்டிய தேவை இல்லை. பலாலி விமான நிலையத்தில் இருந்து எதுவும் எங்கும் கொண்டு செல்லப்படவில்லை.

இந்திய விமான நிறுவனங்கள் தமது விமானங்களை பலாலியில் தரை இறக்கத் தயார் எனில் ஓர் இரவில் பலாலி விமான நிலையத்தை இயங்க வைக்க என்னால் முடியும். – என்றார்.

# ஆட்காட்டிவெளி மாவீரர்களின் துயிலும் இல்லம் சிரமதானம்!



மாந்தை மேற்கு ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில், மாவீரர் தின ஏற்பாட்டுகுழுவினரால் ஞாயிற்றுக்கிழமை சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சிரமதானம் முடியும் நிலையில் துயிலும் இல்ல பகுதிக்கு வந்த அடம்பன் பொலிஸார், சிரமதானம் மேற்கொண்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்தோடு மாவீரர் தின நினைவேந்தல் மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஏற்பாட்டுக்குழுவினரை அச்சுறுத்தியுள்ளனர்.



# வெள்ள நீரைக் கடலுக்குள் வெளியேற்றும் செயற்பாடுகள் மட்டக்களப்பில் முன்னெடுப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடும் மழை காரணமாக விவசாய நிலங்கள் மூழ்கும் நிலை யேற்பட்டுள்ளதால் வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையில் முகத்துவாரத்தின் ஊடாக வெள்ள நீரை கடலுக்குள் வெளியேற்றும் செயற்பாடுகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இந்தப் பகுதியில் உள்ள வாவிக்கரையை அண்டிய பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதன் காரணமாக இதனை வெட்ட வேண்டிய அவசியம் உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார். இதேவேளை ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் வெள்ள நீரை வெளியேற்றினால்தான் விவசாயிகளை காப்பாற்ற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆறுமுகம் தொண்டமான் கலாசார மண்டபம் திறப்பு






கலாசார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட நுவரெலியா – கந்தபளை எஸ்க்கடேல் தோட்டத்துக்கான ஆறுமுகம் தொண்டமான் கலாசார மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இதேவேளை, நுவரெலியா பிரதேச சபையின்

நிகழ்வில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தவிசாளர் பி.ராஜதுரை என கட்சி முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்

## கொலையாளி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாகத் தமிழ் உறவினர்கள் 13 ஆண்டுகளாக ஏங்கித் தவிக்கின்றனர். 2050 நாட்களுக்கும் அதிகமாக தெருக்கள் மற்றும் பொதுவான இடங்களில் நின்று கண்ணீரும் கம்பலையுமாய் போராடி வருகின்றனர்.

உள்நாட்டிலும், உலக அரங்கிலும் அந்த உறவுகளின் குரல்கள் ஒலிக்கின்றன. ஆனால், அரச அதிகார வர்க்கத்தினர் காணாமல் ஆக்கபட்டவர்கள் தொடர்பாக பொறுப்பற்ற விதத்திலும், மலினமாகவும், நகைப்பாகவும், நையாண்டியாகவும் பல கருத்துகளை முன்வைத்துள்ளனர். அவற்றைப் பார்ப்போம்.

1) நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ – காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிரோடு இருப்பதற்கான சாத்தியம் இல்லை.

2) இராணுவத்தினர் – போரின் போது எவரும் எம்மிடம் சரணடையவில்லை.

3) காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலக விசாரணை அதிகாரி மகேஷ் – இராணுவத்தால் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் விடுதலைப்புலிகளால்தான் காணாமல் ஆகியிருப்பார்கள். காணாமல்போனவர்கள் என்போர் சிலர் வெளிநாடுகளில் உள்ளனர்.

4) விமல் வீரவன்ச (அமைச்சராக இருந்த போது) – காணாமல் போனவர்களை மண்ணைத் தோண்டிப் பாருங்கள்.

5) கோட்டாபய ராஜபக்ஷ (ஜனாதிபதியாக இருந்த போது) – காணாமல் ஆக்கப்பட்டவர்களை மறந்து விடுங்கள்.

இவ்வாறு உள்நாட்டில் அரச சார்பான பொறுப்புள்ள தலைவர்கள், அதிகாரிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளை, இறுதிப் போரின் போது களத்தில் நின்ற மேஜர் ஹசித சிறிவர்தன வெளிநாட்டில் இருந்தவாறு சில தகவல்களை வெளியிட்டுள்ளார் என்று அறியப்படுகின்றது.

அந்தவகையில் வெள்ளைக் கொடியுடன் விடுதலைப்புலிகள் தானறியும் வகையில் சரணடைந்தார்கள் என்றும், அவர்கள் தன்பார்வையில் இருந்தார்கள் என்றும் கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் (கோட்டாபய ராஜபக்ஷ) கட்டளைக்கு அமைவாகத் தன்னை அகற்றிவிட்டு பொறுப்பேற்ற தளபதி ஒருவரின் பணிப்பின் பேரில் அவர்கள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார்கள்என்றும்அவர்கூறியுள்ளார்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் கடத்தப்பட்டவர்கள், கைதுசெய்யப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள், உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள் என்று நான்கு வகையினர் காணப்பட்டனர்.

இவர்களில் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கான வலிதான சாட்சியங்கள் உறவினர்களாக உள்ளனர். சரணடைந்தவர்களுக்கும் மேஜர் சிறிவர்தன போன்றவர்கள் சாட்சியமாக உள்ளனர்.

இப்படியெல்லாம் இருக்க, அரச தரப்பினரின் கருத்துக்கள் ஒரேவிதமாக இல்லை. அவர்களுள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் கருத்து முக்கியமானது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உள்ளார்கள், அவர்களை மறந்துவிடுங்கள் என்று கூறுகின்றார்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்டோரின் உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதுவதாகத் தெரிகின்றது.

விமல் வீரவன்சவின் கருத்துப்படி காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் மண்ணைத் தோண்டிப் பார்ககச் சொன்னதாகப் பொருள்கொள்ளலாம்.

மனிதர்களைத் தாக்கும் காட்டு விலங்குகளுக்கே கருணை காட்டும் நாட்டுத் தலைவர்கள், தமிழர்கள் விடயத்தில் காட்டும் மெத்தனப்போக்கு அடிப்படைவாத வன்மத்தின் கொடிய போக்கைக் காட்டுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்பதையும் நம்ப வைக்கின்றது. எனவே, கொலையாளிகளுக்கு என்ன தண்டனையை இந்த அரசு வழங்கப்போகின்றது? – என்றுள்ளது.

## தனுஷ்கவுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை ஆஸ்திரேலியா நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதையடுத்து அவர் தொடர்ந்தும் பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தனுஷ்க குணதிலக்க மீது 4 பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில், இன்று காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக கைவிலங்குடன் சிட்னி நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் தனுஷ்க குணதிலக்க நீதின்றில் பேசினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், அவர் ஒரு வெளிநாட்டுப் பிரஜை என்பதால், அவரது பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது என்று சிட்னி நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, அவர் தொடர்ந்தும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட் டுள்ளார்.

அடுத்தகட்ட நடவடிக்கையாக, அவர் ஒரு திருத்த நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று அவருக்குச் சிட்னி பொலிஸாரும் பிணை வழங்க மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, பாலியல் குற்றச்சாட்டில் கைதான இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் தனுஷ்க குணதிலக்கவை சகல விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் இருந்து இடைநிறுத்துவதற்கு ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஊடக அறிக்கை ஒன்றை இன்று விடுத்துள்ள ஸ்ரீலங்கா கிரிக்கெட் உடன் அமுலாகும் வகையில் இந்தத் தீர்மானம் அமுலுக்கு வருகின்றது என்று அறிவித்துள்ளது.

இதனிடையே தனுஷ்க குணதிலக்க மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று ஸ்ரீ லங்கா கிரிக்கெட் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

## அன்று தீர்வை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லத் தயாராக இல்லை. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை. அது நடக்கக் கூடாது என்பதற்காகவே முன்னாள் தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயக் குழுவை அரசு நியமித்துள்ளது – என்றும் சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

யாழ்., வடமராட்சி, அல்வாய் வடக்கு வித்தியாசாலையில் நேற்று நடைபெற்ற முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளருமான வேலுப்பிள்ளை சிவயோகன் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார் .

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிமால் சிறிபால டி சில்வா சொல்லுகின் றார் தமிழ்க் கட்சிகள் எல்லாம் ஒன் றாக வாருங்கள் என்று. யார் யார் எங்களுக்கு ஆலோசனை சொல்வதென்று காலம் இல்லாம் போய்விட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் அரச தரப்பில் இருந்து பேச்சுக்களில் ஜீ.எல் பீரிஸ் மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர். இவர் அப்போது முன்வைத்த தீர்வு தான் என்ன? அப்போது எமது தேசியத் தலைவர் பிரபாகரன் மிக்க பலத்தோடு இருந்தபோது பயங்கரவாதிகள் என்றும், நாட்டை பிளவுபடுத்த முயல்கிறார்கள் என்றும் கூறிவிட்டு எமக்கு ஆலோசனை கூற வருகின்றார் நிமால்.

எம்மை நோக்கி எதிரியே எள்ளி நகையாடுகின்ற அளவுக்கு நாங்கள் இருக்கக்கூடாது. நாம் அனைவரும் எமது இன விடுதலைக்காக ஒன்றுபட வேண்டும்.

நாங்கள் இன்னும் ஒரு எல்லையைத் தொடவில்லை .நாங்கள் நீண்டகாலம் பேசுகின்ற எங்கள் அரசியல் உரிமைகளில் ஒரு புள்ளியைக் கூட தொடவில்லை. எங்களால் இன்னும் தொட்டு நிற்க முடியாத ஓர் இனமாக நாங்கள் நிற்கின்றோம்.

வவுனியா மாவட்டத்திலே இவ்வளவு வீதமான காணிகளைக் காணவில்லை, முல்லைத்தீவு மாவட்டத்திலே இவ்வளவு வீதமான காணிகளைக் காணவில்லை, மன்னாரிலே காணவில்லை என்கின்ற செய்திகளைத்தான் நாங்கள் நாளாந்தம் படிக்கின்றோம்.

யாழ்ப்பாணத்திலே பெருமளவான நிலப்பரப்பு இராணுவத்தின் வசமுள்ளது. அங்கே சிங்களக் குடியேற்றம் நடக்கப் போகின்றதா என்றெல்லாம் செய்திகளைத்தான் பார்க்கின்றோம்.

இதேவேளை, பழைய தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தலைமையிலே மீண்டும் ஒரு எல்லை நிர்ணயக் குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் தான் நடக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றபோது உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயக் குழு ஒன்று நியமிக்கப்படுகின்றது.

அப்படி என்றால் எல்லை நிர்ணயக் குழு அறிக்கை வரும் வரை தேர்தல் நடாத்தப்பட முடியாது என்பதே சட்டம். ஆகவே இது தேர்தலைத் தள்ளிப்போடுவதற்கான ஒரு உத்தியாகும்.

அதேவேளை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலே அபகரிக்கப்படுகின்ற தமிழர்களுடைய நிலங்களைப் பொலனறுவையோடும் அனுராதபுரத்தோடும் சேர்த்து அவற்றை எல்லை நிர்ணயம் செய்து சிங்கள பிரதேசங்களாக அவற்றை மாற்ற அரசு முற்படுகின்றது. அதனூடாக அங்கு சிங்களப் பிரதிநிதிகளை உருவாக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது – என்றார்.

# படுவான்கரைப் பெருநிலப்பரப்புக்குள் காட்டு யானைத் தொல்லை அதிகரிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பெருநிலப்பரப் புக்குட்பட்ட போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் திக்கோடை, தும்பங் கேணி இளைஞர் விவசாயத் திட்டம், களுமுந்தன்வெளி உள்ளிட்ட பல கிராமங்களுக்குள் நேற்று முன்தினம் இரவு சனிக்கிழமை இரவு உட்புகுந்த காட்டுயானைகள் பயன்தரும் தென்னை, மரவெள்ளி, வாழை உள்ளிட்ட மரங்களை அழித்துள்ளமையுடன், வீடுகளையும் உடைத்துவிட்டுச் சென்றுள்ளன என அப்பகுதி மக் கள் கவலை தெரிவிக்கின்றர்.

தாம் கடந்த யுத்தகாலத்தில் எவ்வாறு பல இன்னல்களை திர்கொண்டு வந்தோமோ அதுபோன்று தற்போது இரவு பகலுமாக காட்டுயானைகளின் தாக்குதலையும், அழிவுகளையும் எதிர்கொள்ள நோரிட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

நாம் இவ்வாறு அல்லும் பகலும் தூக்கமின்றி வழித்திருப்பதனால் தினமும் நோய் நிலைக்குட்படுவதாகவும், தமது நிலமையை அறிந்தவர்கள் கண்டும் காணாதது போல் இருப்பது தமக்கு மிகுந்த மனவேதனையளிப்பதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றர்.

எனவே அப்பகுதியில் அமைந்துள்ள தளவாய் காட்டுப்பகுதியில் தங்கி நிற்கும் காட்டு யானைகளைப் பிடித்துக் கொண்டு சரணாலயங்களில் விட்டு விட்டு, எல்லைப்புறங்களில் யானைப் பாதுகாப்பு வேலிகளை இடவேண்டும் என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622